JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**A1 to A4 absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 10.02.2026.

**C.C. 277/2010** **Name**: சத்தியமூர்த்தி **S/o.** தாமோதிரன் **P.W.** 1

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு**

**சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னுடைய கடை காவல் நிலையத்திலிருந்து 1/2 கிலோமீட்டர் என்றால் சரிதான். என்னுடைய கடையில் இருந்து களவு போனவுடன் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் மறுநாள் புகார் கொடுத்தேன். களவு போன அன்று புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கடையின் பெயர் ராதா வெள்ளி மாளிகை ஆகும் . என்னுடைய கடை நான் தனியாக நடத்தி வருகிறேன் அல்லது பங்குதாரர்களோடு நடத்தி வருகிறேனா என்றால் ஈஸ்வரமூர்த்தி என்ற பங்குதாரர்வுடன் நடத்தி வருகிறேன். அ.சா.ஆ.1 புகாரில் கடையின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கூட்டு பங்குதாரராக கடை நடத்தி வருவதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. 2009 ஆம் ஆண்டில் எத்தனை பேர் என்னுடைய கடையில் வேலை செய்கிறார்கள் என்றால் என்னுடன் சேர்த்து மூன்று பேர் வேலை செய்தார்கள். என்னுடைய கடையில் வருகை பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். வருகை பதிவேட்டினை பார்த்தால் அன்றைய தினம் யார் கடைக்கு வந்தார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் யார் பொருட்களை எடுத்து காண்பித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் வேலையில் இருந்தவர்களுக்கான வருகை பதிவேட்டினை போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 4 – 5 பெண்கள் கடைக்கு வந்ததாக சொல்லி உள்ளேன் அவர்களின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. ஒரு நபர் ஒயர் கூடையில் பிளாஸ்டிக் பெட்டியில் வெள்ளி கொலுசு எடுத்து சென்றார் என்று குறிப்பிட்டுள்ளேன் அந்தப் பெண்ணின் அங்க அடையாளங்கள் பற்றி புகார் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் கொலுசின் மாடல்கள் மற்றும் எண்ணிக்கை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுடைய கொலுசில் கம்பெனியின் முத்திரை உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் கொலுசின் முத்திரையை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்துக்கு செல்லும்போது 5 பெண்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான்.

4. குன்னத்தூர் நால் ரோட்டில் கடைகள் அதிகமாக உள்ளது என்றால் சரிதான். ஒயர் கூடையின் நிறமோ, அடையாளமோ சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள கொலுசுகளை நான் எங்கிருந்து வாங்கினேன் என்பதற்கான ஆவணங்கள், ரசீதுகளை காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு புள்ளிவிவரத்திற்காக போடப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் உள்ள சங்கதிகள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கடையின் பெயரில் பதிவுச் சான்றிதழ் உள்ளது என்றால் சரிதான். பதிவு புத்தகத்தை போலீசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை